41

# இன்றியமையாத இரண்டு அறிக்கைகள்

## (16:13-20)

*மத்தேயு புத்தகத்தில் கிறிஸ்து தேவனுடைய குமாரன் எனும் பேதுருவின் அறிக்கை ஒரு இன்றியமையாத குறிப்பு. சுவிசேஷ விவரம் இயேசு தெய்வீக மேசியா என்ற அடையாளப்படுத்துதலுடன் துவங்குகிறது (1:1, 16, 17, 20, 23). இயேசு ஞானஸ்நானம் பெற்றபின், தேவன் அவரைத் தம்முடைய குமாரன் என்று அறிவித்தார் (3:17). யோவான் ஸ்நானன் கிறிஸ்துவுக்கு வழியை ஆயத்தப்படுத்தினார் (3:11, 12), ஆனால் பிற்பாடு இயேசு அவர்தான் என்று உறுதிப்படுத்திக்கொள்ள விரும்பினார் (11:2-6). திரளான கூட்டம் அடிக்கடி இயேசுவின் உபதேசம் மற்றும் அற்புதங்களைக் குறித்து ஆச்சரியப்பட்டார்கள் (4:24, 25; 7:28, 29; 9:31, 33; 13:54; 15:31). சிலர் அவரை - விசேஷமாக அவரது சொந்த ஊராகிய நாசரேத்தில் இருந்தவர்கள் புறக்கணித்தனர் (13:57) மேலும் மதத்தலைவர்களும் (9:3; 12:24) புறக்கணித்தனர். மற்றவர்களோ அவரை தாவீதின் குமாரன் என்று பிரகடனம் செய்தனர் (9:27; 12:23; 15:22). கடலையும் காற்றையும் அவர் அமைதிப்படுத்தியபோது, சீஷர்களே இயேசுவின் அடையாளத்தைக் குறித்து கேள்வி எழுப்பினர்: "இவர் எப்படிப் பட்டவரோ, காற்றும் கடலும் இவருக்குக் கீழ்ப்படிகிறதே?" என்றார்கள் (8:27). அவர் தண்ணீரின் மேல் நடந்ததைக் கண்டு கலக்கமடைந்த அவர்கள், "மெய்யாகவே நீர் தேவனுடைய குமாரன்" என்றார்கள் (14:33). இந்தப் பிரகடனம் ஒரு அமைதியான சூழலில், பேதுரு செய்த நல்ல அறிக்கைக்கு முன்னோட்டமாக இருந்தது.*

### பேதுரு: நீர் கிறிஸ்து *(16:13-16)*

**13பின்பு, இயேசு பிலிப்புச் செசரியாவின் திசைகளில் வந்தபோது, தம்முடைய சீஷரை நோக்கி: மனுஷகுமாரனாகிய என்னை ஜனங்கள் யார் என்று சொல்லுகிறார்கள் என்று கேட்டார்.**

**14அதற்கு அவர்கள், சிலர் உம்மை யோவான் ஸ்நானன் என்றும், சிலர் எலியா என்றும்; வேறு சிலர் எரேமியா அல்லது தீர்க்கதரிசிகளில் ஒருவர் என்றும் சொல்லுகிறார்கள் என்றார்கள்.**

**15அப்பொழுது அவர், நீங்கள் என்னை யாரென்றும் சொல்லுகிறீர்கள் என்று கேட்டார்.**

**16சீமோன் பேதுரு பிரதியுத்தரமாக, நீர் ஜீவனுள்ள தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்றான்.**

***வசனம் 13.*** *கலிலேயா கடலின் கிழக்குத் திசையில் (16:5) பெத்சாயிதாவில் அவர் தங்கியபின், (மாற்கு 8:22) இயேசுவும் அவருடைய சீஷர்களும் வடக்கே ஏறத்தாழ இருபத்தைந்து மைல்களைக் கடந்து,* ***செசரியா பிலிப்பியின் திசைகளில்*** *வந்தார்கள். "திசைகள்" என்பதற்குப் பதிலாக, மாற்கு 8:27ல் "கிராமங்களுக்கு" என்ற வார்த்தை பயன்படுத்தப்பட்டுள்ளது. இந்தப் பகுதி ஊற்றுகளெல்லாம் யோர்தான் நதியில் சேரும் தண்ணீர் ஊற்றுகளாக செயல்பட்டன,[1] அவைகள் எர்மோன் மலைகளின் மேலிருந்து புறப்பட்டவைகள். அது பழைய ஏற்பாட்டுப் பட்டணமாகிய தாணுக்கு அருகிலும், இஸ்ரவேலின் வடக்கு எல்லைப்பகுதியிலும் இருந்த ஒன்று. வடக்குப் பகுதியில் இருந்தவை ஒரு பழமொழிக்கு ஒப்பிடப்பட்டு "தாண்முதல் பெயெர்சேபா வரைக்கும்,"[2] என்று சொல்லப்பட்டது முழு இஸ்ரவேல் நாட்டையும் சுட்டிக் காட்டியது.[3]*

*பழைய ஏற்பாட்டில் இருந்த இந்த இடம் பாகால் வணக்கம் செய்கிற இடமாக அறியப்பட்டிருந்தது (யோசுவா 11:17; நியாயாதிபதிகள் 3:3;1 நாளாகமம் 5:23). கிரேக்க பண்பாட்டுக் காலத்தில், பட்டணமானது "பானியாஸ்" அல்லது "பனையாஸ்" என்று பெயர் பெற்றிருந்தது. கிரேக்க கடவுளான பான், என்னும் தேவனைக் கனப்படுத்தும் பொருட்டு கற்பாறைகளில் நினைவுச் சின்னங்கள் பொறிக்கப்பட்டன, ஒரு கட்டுக்கதையில் அவன் அருகிலிருந்த குகையில் பிறந்ததாகச் சொல்லப்படுகிறது. பான் பாதி ஆட்டின் உருவத்தையும் பாதி மனித உருவத்தையும் கொண்டிருப்பதாக உருவகிக்கப்படுகிறது. செழுமைக்கும் இளவேனிற்காலத்துக்கும் இந்த கடவுளுக்குத் தொடர்பு உண்டு, இவன் மேய்ப்பர்களுக்கும், ஆட்டு மந்தைக்கும், வயல் வெளிக்கும், தோப்புகளுக்கும், காடுகளுக்கும் கடவுள் என்று சொல்லுவதுண்டு.*

*காற்பங்கு தேசாதிபதியாகிய பிலிப்புவினால் அகஸ்து இராயனுக்காக* (Augustus Caesar) *"செசரியா" என்று பெயரிடப்பட்டது.[4] பின்னதாக தன்னுடைய பெயரை தானே கனப்படுத்திக் கொள்ளவும், மத்திய தரைக்கடல் கரையில் அமைந்திருந்த சிறப்புமிக்க துறைமுகப்பட்டணமாகிய செசரியா எனும் மற்றொரு பட்டணத்திலிருந்து வித்தியாசப்படுத்திக்காட்டுவதற்காகவும் பிலிப்பி எனும் பெயரைச் சேர்த்தான் (நடபடிகள் 8:40; 12:19; 23:33).[5] அகஸ்து இராயனை கனப்படுத்தும் பொருட்டு பெரிய ஏரோதுவினால் செசரியா பிலிப்பியில் கட்டப்பட்ட மிகப்பெரிய கோவில் ஒன்று உள்ளது.[6] இந்தப் பட்டணத்தில் பெரும்பாலான புறஜாதிகளின் ஆதிக்கம் இருந்த போதிலும், ஒரு சிறிய மக்கள் தொகை கொண்ட யூதர்களும் அங்கே இருந்தார்கள்.[7]*

*வரவிருந்த பரலோக ராஜ்யத்தைக் குறித்த அறிவிப்பை ஒரு வஞ்சப்புகழ்ச்சியாக இந்த இடத்தைத் தேர்ந்தெடுத்து அறிவித்திருக்கிறார் என்பது எவ்வளவு ஆச்சரியமான விஷயம்! பூமியிலேயே மிகவும் வல்லமையான ஆட்சியை அந்நாட்களில் செய்து கொண்டிருந்த ஒரு ஆட்சியாளனுக்கு அர்ப்பணம் பண்ணப்பட்ட அந்த இடத்தில், இயேசு தமது சொந்த இராஜ்யமாகிய சபையை, இன்னும் சில குறுகிய வருடங்களுக்குள்ளாகவே ஸ்தாபிக்கப்பட்டு அந்த பூமிக்குரிய இராஜ்யத்தை விழுங்கிப் போடும் என்று இயேசு பேசினார்.வரவிருந்த அந்த இராஜ்யம் தானியேல் 2:44, 45ல் சொல்லப்பட்ட தீர்க்கதரிசனத்தை நிறைவேற்றக் கூடியதாயிருந்தது.*

*செசரியா பிலிப்பியைச் சுற்றியிருந்த அந்தப் பகுதியில் அவர்கள் நுழைந்தபோது, இயேசு தம்மைப் பின் பற்றுவோரை,* **மனுஷகுமாரனாகிய என்னை ஜனங்கள் யார் என்று சொல்லுகிறார்கள்?** *என்று கேட்டார். "மனுஷகுமாரன்" எனும் சொல் மேசியாவுக்குப் பயன்படுத்தி தானியேலில் (7:13) சொல்லப்பட்ட தீர்க்கதரிசனக் குறிப்பு. தீர்க்கதரிசியாகிய எசேக்கியேலுக்கு உண்டான தேவனுடைய வசனங்களில், "மனுபுத்திரன்" எனும் பதம் சாதாரணமாக உலகில் பிறக்கும் மனுஷனுக்குக் சொல்லப்பட்டது. இயேசு தமது மனுஷீகத்தை வலியுறுத்தி, அடிக்கடி குறிப்பிட்ட பட்டம் இதுதான் (8:20க்கான விளக்கவுரையைக் காண்க). அன்று அவரது அடையாளம் குறித்து எண்ணற்ற யூகங்கள் உலா வந்தமையால் அவர் இந்தக் கேள்வியை சந்தேகமற கேட்டார்.*

**வசனம் 14.** *துவக்கத்தில், சீஷர்கள் மறுமொழியாக* **சிலர் அவரை யோவான் ஸ்நானன்** *என்று சொல்லுவதாகக் குறிப்பிட்டனர். அப்படிச் சொன்னவர்களில் ஒருவன், ஏற்கனவே நாம் பார்த்தபடி, ஏரோது அந்திப்பாவும் ஒருவன். இயேசுவுக்கு இருந்த அற்புத வல்லமையை கண்ணுற்ற அவன், யோவான் ஸ்நானன் தான் மரித்தோரிலிருந்து எழுந்தான் என்று அவன் நம்பினான் (14:2 ற்கான விளக்கவுரையைக் காண்க).*

**மற்றவர்கள்** *இயேசுவை* **எலியா** *என்று நினைத்தார்கள். ஒருவேளை அவர்களுடைய வாழ்க்கை முறை அதைப்போல இருந்தது, அவர்களுடைய செய்தி அப்படிப்பட்ட தோற்றத்தைக் கொண்டு வந்தது. மேலும், மல்கியாவும் எலியா வருவான் என்று தீர்க்கதரிசனம் உரைத்தான் (மல்கியா 4:5). இந்த தீர்க்கதரிசனத்தை விளக்கப்படுத்திய இயேசு யோவான் ஸ்நானன் எனும் நபர்த்தத்துவத்தில் எலியா வந்தாயிற்று என்று சொன்னார் (மத்தேயு 11:14 ன் விளக்கவுரையைக் காண்க).*

**இன்னும் சிலர்** *இயேசுவை* **எரேமியா** *என்று நினைத்தார்கள். பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசிக்கும் இயேசுவுக்கும் இருந்த அதிரடி ஒற்றுமை தேவனுடைய மக்களைக் குறித்த அவர்களுடைய அக்கறைதான். எரேமியா "புலம்பல் தீர்க்கதரிசி" என்று அறியப்பட்டிருந்தார். அவர் தமது ஜனங்களின் பாவத்தினிமித்தம் அழுது புலம்பல் புத்தகத்தை எழுதி, அவர்கள் மனந்திரும்பாமல் போனதினிமித்தம் துக்கங் கொண்டாடினார். இயேசுவும் வெளிப்படையாக அழுது கண்ணீர் விட்டார், "அவர் துக்கம் நிறைந்தவரும் பாடு அனுபவித்தவருமாயிருந்தார்" (ஏசாயா 53:3). அவர் எருசலேமின் அழிவை முன்னறிவித்தார் (மத்தேயு 24:1-28) அந்தப் பட்டணத்தினிமித்தம் கண்ணீர் விட்டு அழுதார் (லூக்கா 19:41). எரேமியா, இயேசு ஆகிய இருவருமே யூத தலைவர்களின் கரத்தால் பாடுகளைப்பட்டார்கள்.*

*இவைகளில் சில காரியங்கள் இயேசுவின் ஊழியத்தில் இன்னும் நிறைவேறாமல் இருக்கையில், ஜனங்கள் அவரை எரேமியாவுடன் ஒப்பிடுவது ஏன்? எரேமியாவின் மரணத்தைக் குறித்து, வசனத்தில் ஒன்றும் சொல்லப்படாத காரணத்தினாலே, அவர் பரமேறிச் சென்று மேசியாவின் அழிவில்லா கூட்டத்துடன் சேர்ந்திருப்பார் என்று யூதர்கள் நினைத்திருக்கலாம்.*[8] *மேலும், பழைய ஏற்பாட்டு ஆசிரியர்கள் எழுதியதாகக் கருதப்பட்ட சுவடிகளில் ஒன்றில் எரேமியாவை குறிப்பிட்டு, தேவனுடைய ஜனங்களுக்கு உதவி செய்யும்படி, ஏசாயாவுடன் வந்ததாக சொல்லப்பட்டுள்ளது.*[9]

எப்படியிருப்பினும், இது ஒரு பின்சேர்க்கை என்றும் உருவாக்கப்பட்ட யூதருடைய வசனப்பகுதிகளுடன் கிறிஸ்தவர்களால் கூட்டப்பட்டது என்றும் சில வேத வல்லுனர்கள் நம்புகின்றனர்.

இயேசுவைக் குறித்து மற்றொரு அடையாளம் கொடுக்கப்படுகிறது: அவர் **தீர்க்கதரிசிகளில் ஒருவர்.** இந்த பொதுவான பதில் இயேசுவை பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசிகளுடன் இணைத்துப் பேசுகிறது, ஆகிலும் எந்த ஒரு தனிப்பட்டவருடனும் சேர்த்து குறிப்பிடப்படவில்லை. ஜனங்கள் அவரை, "பூர்வ காலத்து தீர்க்கதரிசிகளில் ஒருவர் உயிர்த்தெழுந்தார்" என்று நம்பினார்கள் (லூக்கா 9:8, 19).

**வசனம் 15.** மற்றவர்கள் தம்மைக் குறித்து என்ன நினைக்கிறார்கள் என்ற விவாதத்திற்குப் பின், இயேசு அப்போஸ்தலர்களிடமே தமது கவனத்தைச் செலுத்துகிறார்: ஆனால் **நீங்கள் என்னை யாரென்றும் சொல்லுகிறீர்கள்?** கிரேக்க மொழியில், "நீங்கள்" என்பது பிரதிப் பெயர் சொல்வலியுறுத்தலைக் கொண்ட ஒன்று. இயேசு தமது அடையாளம் குறித்து மற்றவர்களுடைய அபிப்பிராயத்தைக் குறித்து கேட்டார், ஆனால் இப்பொழுது அவர் தமது **அப்போஸ்தலர்களின்** விசுவாசத்தின் வெளிப்பாட்டைக் கேட்டார். அவர்களுக்குள்ளாகவும் அவர் யார் என்பதில் வித்தியாசப்பட்ட கருத்துக்கள் இருந்திருக்கலாம், ஆகிலும் அவர்கள் சரியாகத் தொடர்ந்து செல்ல ஏதுவாக முடிவெடுக்க சரியான *சமயம்* இதுதான். பூமியில் அவருடைய காலம் (முடிவை நோக்கி) ஓடிக் கொண்டிருந்தது, அதற்குப் பிறகு இந்த மனிதர்களே அவருடைய ஊழியத்தைத் தொடர்ந்து நிறைவேற்றப் போகிறவர்கள். அவரில் அவர்கள் வைத்திருந்த விசுவாசம் அவசியமானது, இல்லாவிட்டால் அவர்களுடைய ஊழியம் வெற்றிபெற இயலாது.

**வசனம் 16. சீமோன் பேதுரு பதிலளித்து, நீர் ஜீவனுள்ள தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்றான்.** பேதுரு அடிக்கடி சீஷர் கூட்டத்துக்காக முன்னின்று பேசும் மனிதனாக இருந்தான் (14:28; 15:15; 16:16; 17:24-27; 18:21). அவனுடைய இந்த நேர அறிக்கை இரண்டு பகுதிகளைக் கொண்டிருந்தன. முதலாவதாக அவன் இயேசுவை "கிறிஸ்து" என்று அடையாளப்படுத்தினான். கூடுதலாக, "இயேசுவை ஜீவனுள்ள தேவனுடைய குமாரன்" என்று அழைத்தான்.[10]

பேதுரு இயேசுவை "கிறிஸ்து" என்று சொன்னதன் மூலம் நெடுநாட்களாக எதிர்பார்த்துக் காத்திருந்த மேசியாவாக ஏற்றுக் கொண்டான். "கிறிஸ்து" (*Christos*) என்பது எபிரெய வார்த்தையின் மொழிபெயர்ப்பாகிய "மேசியா" (*mashiach*) என்பதற்கு சமமானது. தேவன் தெரிந்து கொண்ட "அபிஷேகம் பண்ணப்பட்டவர்" அவரே என்பதைக் குறிப்பிடுகிறது.

இந்த சொல்நடை அதிகாரத்திலிருந்த மனிதர்களின் செயல்முறையிலிருந்து வந்த காரியத்தைக் காட்டுகிறது - அதாவது ஒரு தீர்க்கதரிசியோ அல்லது ஒரு கூட்ட மூப்பரோ - ஒரு எதிர்கால இராஜாவின் தலையின்மேல் ஒலிவ எண்ணெயை ஊற்றி அபிஷேகம் செய்வது போன்றது (1 சாமுவேல் 16:13; 2 சாமுவேல் 2:4; 5:1-3). இஸ்ரவேலின்மேல் ராஜாவாக இருப்பவன், கர்த்தரால் அபிஷேகம் பண்ணப்பட்டு, தேவனுடைய முகவராக பூமியிலே நியமிக்கப்பட்டவன் என்ற முறையில் நோக்கிப்பார்க்கப்படுவான் (சங்கீதம் 2:2, 6). இயேசுவின் நாட்களில் இருந்த ஜனங்கள் தாவீதுக்கு அருளப்பட்ட

*வாக்குத்தத்தத்தின்படி, மேசியா நித்திய இராஜ்யத்தையுடையவராயிருப்பார் என்று எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்கள் (2 சாமுவேல் 7:16).[11] சீமோன் பேதுருவின் சகோதரன், அந்திரேயா, அவர்களது முதல் சந்திப்பிலேயே ஆவலோடே அவரை அறிக்கை செய்து மேசியாவாக பிரகடனம் பண்ணினான் (யோவான் 1:41). நாத்தான்வேல் அவரை "இஸ்ரவேலின் இராஜா" என்றான் (யோவான் 1:49), இதை இன்னொரு வார்த்தையில் சொன்னால் இயேசு தான் மேசியா.*

*"ஜீவனுள்ள தேவனுடைய குமாரன்" என்பதும் மேசியாத்துவ தலைப்புதான், ஆகிலும் இதிலே ஒரு ஆழமான பொருள் அடங்கியுள்ளது (2 சாமுவேல் 7:14; சங்கீதம் 2:7; 89:26, 27; எபிரெயர் 1:5-14). சீஷர்களில் சிலர் இதற்கு முன்பாக இயேசுவை தேவனுடைய குமாரன் என்று ஏற்றுக் கொண்டிருந்தார்கள். நாத்தான்வேல் அப்படியொரு அறிக்கையை செய்திருந்தான் (யோவான் 1:49), இயேசு கலிலேயாவில் காற்றை அமர்த்தினபோது, பன்னிருவரும்கூட அப்படி அறிக்கை செய்தார்கள் (14:33). பேதுரு கர்த்தர் ஜீவ அப்பத்தைக் குறித்து தமது பிரசங்கத்தை செய்ததை கேட்டபின்பு இயேசுவில் இருந்த தனது விசுவாசத்தை "ஜீவனுள்ள பரிசுத்தமுள்ள தேவனுடைய குமாரன்" என்று அறிக்கையிட்டான் (யோவான் 6:68, 69). "தேவனுடைய குமாரன்" என்று சொல்லுவதால் அவர்கள் அவருடைய வல்லமையையும் தெய்வீகத்தையும் ஏற்றுக் கொண்டார்கள் என காட்டுகிறது. தேவனோடு இருக்கிற இயேசுவின் ஒப்புவமையற்ற உறவுமுறையை அவர்கள் அறிக்கை செய்தனர். அவருடைய பிதா "ஜீவனுள்ள தேவன்." இது பழைய ஏற்பாட்டின் அஞ்ஞானிகளின் ஜீவனற்ற விக்கிரகங்களிலிருந்து முரண்பட்டவர் தேவன் என்பதைக் குறிக்கும் பதவி (உபாகமம் 5:26; யோசுவா 3:10; சங்கீதம் 42:2; தானியேல் 6:20; ஓசியா 1:10). பாகாலையும், பேன் எனும் விக்கிரகத்தையும் அகஸ்து இராயனையும் ஆராதித்துக் கொண்டிருந்த செசரியா பிலிப்பைக்கு, ஏற்ற சொல்நடையில் நிச்சயமாக பேசப்பட்டது.*

## இயேசு: "நான் என் சபையைக் கட்டுவேன்" (16:17, 18)

**17இயேசு அவனை நோக்கி: யோனாவின் குமாரனாகிய சீமோனே, நீ பாக்கியவான்; மாம்சமும் இரத்தமும் இதை உனக்கு வெளிப்படுத்தவில்லை, பரலோகத்திலிருக்கிற என் பிதாவே இதை உனக்கு வெளிப்படுத்தினார்.**

**18மேலும் நான் உனக்குச் சொல்லுகிறேன், நீ பேதுருவாய் இருக்கிறாய், இந்தக் கல்லின்மேல் என் சபையைக் கட்டுவேன்; பாதாளத்தின் வாசல்கள் அதை மேற்கொள்வதில்லை.**

***வசனம் 17.*** *இயேசு பேதுருவை* **பாக்கியவான்** *என்று சொல்லுகிறார். ஏனெனில் இந்த சத்தியத்தைக் குறித்த அறிவு அவனுக்கு இருப்பதாலும், அந்த அறிவு அவனுக்கு வெளிப்படுத்தப்பட்ட அந்த அறிவின் மூலப் பிறப்பிடத்தினாலும். "பாக்கியவான்" என்பது எல்லை கடந்த மகிழ்ச்சிக்கு தன்னிடத்தில் காரணம் கொண்டிருப்பவர் என்பதை விவரிக்கிறது (5:3-12; 11:6; 13:16; 24:46).*

*பேதுரு "பாக்கியவான்" எனப்பட்டார் ஏனெனில்* ***(மாமிசமும் இரத்தமும்)*** *இந்த சத்தியத்தை அவருக்கு வெளிப்படுத்தவில்லை, மனுஷனும் வெளிப்படுத்த வில்லை, ஆனால்* ***பரலோகத்திலிருக்கிற பிதா*** *தாமே அவருக்கு வெளிப்படுத்தினார்.* John Lightfoot *என்பவர் "மாமிசமும் இரத்தமும்," என்ற சொற்றொடருக்கு கவனத்தைத் திருப்புகிறார், யூத எழுத்துக்களில் எண்ணற்ற முறை இது காணப்படுகிறது. தேவனுக்கும் மனுஷனுக்குமிடையேயான முரண்பாட்டை விவரிக்க பயன்படுத்தப்படுகிறது.*[12] *புதிய ஏற்பாட்டில் மனிதனுடைய பெலவீனத்தைக் குறிக்கவும் அது வலியுறுத்துகிறது (1 கொரிந்தியர் 15:50; கலாத்தியர் 1:16; எபேசியர் 6:12; எபிரெயர் 2:14).* NEB *வசனம் 17ல் "மாமிசப் பிரகாரமான மனுஷன்" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.*

*பிதாவினால் வெளிப்படுத்தப்பட்ட உண்மை (சத்தியம்) என்பது கிறிஸ்துவின் உபதேசத்தையும் அவரால் செய்த அற்புதங்களையும் சுட்டிக் காட்டுகிறது (11:25, 26). தமது செய்தியும் ஊழியமும் தேவனிடத்திலிருந்து வந்தவை என்பதை இயேசு தெளிவுபடுத்தினார் (யோவான் 4:34; 5:30; 6:38, 39; 7:16). ஆகையால், இயேசுவின் ஊழியத்தைக் கவனித்திருந்த பேதுரு, இயேசுவை தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்று விசுவாசிக்கும்படி வழிநடத்தியிருக்க வேண்டும் (14:33; யோவான் 6:69). மற்றொரு சாத்தியக்கூறு என்னவெனில் பரிசுத்த ஆவியானவர் நேரடியாக இந்த சத்தியத்தை பேதுருவுக்கு அருளியிருக்கக் கூடும். எல்லாவற்றிற்கும் மேலாக, அது ஒரு ஏவப்படும் யுகமாக இருந்தது (2 பேதுரு 1:20, 21). தேவன் இன்றும் ஜனங்களுக்கு இயேசுவை அடையாளப்படுத்திக் கொண்டுதான் இருக்கின்றார், ஆனால் தமது ஏவப்பட்ட வசனத்தின் மூலம் அப்படிச் செய்கிறார் (ரோமர் 10:13-17).*

*இயேசு பேதுருவை* ***யோனாவின் குமாரனாகிய சீமோனே*** *என்று அழைக்கிறார். "பார்" எனும் அராமிக் வார்த்தை யோனாவுடன் சேர்க்கப்பட்டு இந்த வார்த்தை எபிரெய மொழியில் "பென்" என்பதற்கு சமமாகச் சொல்லப்படுகிறது. இரண்டுமே "குமாரனாகிய" என்ற பொருளையுடையது. பேதுரு "யோனா" என்று பெயரிடப்பட்ட ஒருவருடைய குமாரன். இயேசு பேதுருவைச் சந்தித்த முதல் முறையே இந்தப் பெயரைத் தான் பயன்படுத்தினார் (யோவான் 1:42). தமது உயிர்த்தெழுதலுக்குப் பின்பு அதை மூன்று முறை கலிலேயாக் கடல் அருகே குறிப்பிட்டார் (யோவான் 21:15-17).*

***வசனம் 18.*** *இயேசு மேலும் பேதுருவினிடத்தில் அறிவித்து,* ***மேலும், நான் உனக்குச் சொல்லுகிறேன், நீ பேதுருவாய் இருக்கிறாய், இந்தக் கல்லின்மேல் என் சபையைக் கட்டுவேன்;*** *என்றார். அவர்களுடைய முதல் சந்திப்பின்போது சீமோனுக்கு அராமிக் பெயராகிய "கேபா," என்று பெயரிட்டு அழைத்தார், அதன் பொருள் "கல்" (காண்க யோபு 30:6; எரேமியா 4:29). இந்தப் பெயருக்குச் சமமான கிரேக்கப் பெயர் "பேதுரு" (*Petros*), இது ஒரு ஆண்பாலைக் குறிக்கும் வார்த்தை, அதன் பொருள் "கல்."*[13] *இயேசு "இந்தக் கல்லின்மேல் என் சபையைக் கட்டுவேன்," என்று சொன்னபோது, அவர் சீமோனுக்குக் கொடுத்த பெயரை வைத்து ஒரு சொல் விளையாட்டைச் செய்கிறார். "கன்மலை" என்பதற்கு கிரேக்கப் பதம் (*petra*) இயேசுவின் வாக்கியத்தின்படி பெண்பாலில் பேசப்படுகிறது, அது மலைத் தொடர்ச்சியான அல்லது பெரிய கற்பாறையைக்*

குறிக்கிறது.[14] செசரியா பிலிப்பி பகுதிகளில் மலைகளும் பாறைகளும் இருந்த விதம் அப்படியொரு உருவகத்தை மனதிற்குக் கொண்டு வந்திருக்கக் கூடும்.

இயேசு புறஜாதிகளிடம் கிரேக்க மொழியில் பேசியிருந்தாலும் (15:21-28), தம்முடைய சீஷர்களிடம் பேசினபோது அராமிக் மொழியில் இந்த நிகழ்ச்சியின் போது பேசியிருக்கலாம். அப்படியிருந்திருக்குமானால், அதே அராமிக் (*keypap'*) வார்த்தையை "பேதுரு" "கன்மலை" என்ற இரண்டுக்கும் பயன்படுத்தியிருக்கக் கூடும். அப்படியானால், இயேசுவின் வாக்கியத்தை கிரேக்க மொழிக்கு மொழிபெயர்த்தபொழுது, மத்தேயு இயல்பாகவே *பெட்ரா* எனும் அராமிக் வார்த்தைக்கு ஏற்ப, பெண்பால் பெயர்ச் சொல்லில் குறிப்பிட்டிருக்கலாம், ஏனெனில் *பெட்ரா* என்பது தான் நெருக்கமாக ஒத்துப்போகிற பதம். எப்படியிருப்பினும், பேதுரு ஆண் பால் ஆனதினாலே ஆண் பாலில் *பெட்ராஸ்* எனும் சொல் பயன்படுத்தப்பட்டதாகக் குறிப்பிடுவது தான் பொருத்தமாயிருக்கும். பெயர்ச்சொற்களான *பெட்ரா பெட்ராஸ்* இரண்டுமே ஒன்றுக்கொன்று மாறி மாறி சிலவேளைகளில் பயன்படுத்தப்பட்டாலும்,[15] இப்படிப்பட்ட வசனப்பகுதிகளில் ஒருபோதும் அப்படியிருந்ததில்லை. அவருடைய வார்த்தை "பேதுரு" "கன்மலை" இரண்டையும் வேறுபடுத்திக் காட்டுபவை.

இயேசு குறிப்பிட்டதின் பொருள் அடிக்கடி விவாதிக்கப்படுவதுண்டு. "கல்லின்மேல்" என்றபதம் பேதுருவைத்தான் குறிக்கிறது என்று வாதிடப்படுவதுண்டு. இன்னொரு வார்த்தையில் சொன்னால், கிறிஸ்து தமது சபையை பேதுருவின் மேல் கட்டினார் என வாதிடுவர். இந்த கண்ணோட்டம் ஆரம்பகால கிறிஸ்தவத்தில் இந்த அப்போஸ்தலன் ஆற்றிய கடமைகளுக்கு பொருத்தமாக இருந்தது, எனவே அவரே பிரதான அப்போஸ்தலன் என்பதற்கான உரிமை கொண்டவராகக் காட்டுகிறது. அவர் முக்கியமான கடமையாற்றினார் என்பது உண்மைதான், ஆனால் அது பிரதானமான கடமையல்ல. அப்போஸ்தலரின் பெயர் பட்டியலில் முதலாவதாக அவருடைய பெயர் குறிப்பிடப்படுவதால் அவர் மற்றவர்களை நடத்திச் செல்லும் ஸ்தானத்திலிருந்தார் என்ற முக்கியத்துவம் அவரைக் குறித்து வெளிப்படுகிறது (10:2-4; மாற்கு 3:16-19; லூக்கா 6:14-16; நடபடிகள் 1:13). இயேசு பரமேறிச் சென்றபிறகு, கீழ்வரும் நிகழ்வுகளில் அவர் தமது முன்னின்று நடத்தும் கடமையைச் செய்தார்: அப்போஸ்தலர்களில் யூதாஸிற்குப் பதிலாக ஒருவனை நியமித்தல் (நடபடிகள் 1:15-22), பெந்தெகோஸ்தே நாளில் சபையின் ஸ்தாபிதம் (நடபடிகள் 2:14-40), சமாரியர்களுக்கு பரிசுத்த ஆவியை கைகளை வைத்து கொடுத்தல் (நடபடிகள் 8:14-25), புறஜாதிகளுக்கு சுவிசேஷத்தைப் பரப்புதல் (நடபடிகள் 10; 11), மற்றும் யூத புறஜாதிகளைக் குறித்த வாக்குவாதங்களை சரிசெய்தல் (நடபடிகள் 15:7-11).

இந்தக் கண்ணோட்டம், எவ்வித கத்தோலிக்கப் பாரம்பரிய உபதேசத்தையும் ஏற்றுக்கொள்ளாமலேயே, தர்க்கம் பண்ணப்படுகிறது, அவர்களுடைய உபதேசத்தில் பேதுரு முதல் போப் என்றும், அந்தப் பதவி தொடர்ந்து வாழையடி வாழையாக ("அப்போஸ்தலர் வழி வருதல்" என்னும் உபதேசம்) தொடர்வதாகவும் கருதப்படுகிறது. உதாரணமாக, தேவனுடைய வரலாற்றின் இந்த சம்பவத்தில் பேதுருவின் ஒப்பற்ற கடமைகளை David Hill காணும் விதமாவது. அவருடைய பார்வையில், ரோமாபுரியில் இன்றுள்ள

*பிஷப்புகளின் கடமைகள் ஒரேமாதிரியாக இருப்பது சட்டரீதியானவைகள் அல்ல,[16] என்றார். கூடுதலாக,* Donald A. Hagner,

> *ஆகிலும் பேதுரு எனும் கண்மலையின் மேல் சபை கட்டப்பட்டது என்று வைத்துக் கொண்டாலும், அதினுடைய இயல்பான அர்த்தத்தில், போப்பின் பதவியை உறுதிப்படுத்துவதற்கோ அல்லது சபை, அப்போஸ்தலர்களைப் போலவே, இயேசுவாகிய அடைக்கலப் பாறையை சார்ந்து நிலைநிற்கிறது என்பதை மறுதலிக்கவோ எவ்வித ஆதாரமும் இல்லை. எல்லாவற்றிற்கும் மேலாக இயேசுவே இதன் ஸ்தாபகர், அப்போஸ்தலர்கள் எதைச் செய்தாலும் அவர் மூலமே செய்கிறார்கள் ... அடிக்கடி சுட்டிக் காட்டப்பட்டது போல, பேதுரு கன்மலை என்ற கண்ணோட்டத்தில் பார்க்கப் பட்டாலும், அவருடைய அறிக்கையைக் காட்டிலும் மேலானது எதுவுமில்லை, அது அவர் கிறிஸ்துவின் முகவராக செயல்பட்டு சுவிசேஷப் பரவலை அவருடைய பொறுப்பில் நடப்பிக்கும் அதிகாரத்தை அடுத்துவரும் வசனத்தில் கொடுக்கப்படுவதாகக் காண்கிறோம் என்றார்.[17]*

*இந்த ஸ்தானம் பெரும்பாலும் எபேசியர் 2:20 உடன் இணைப்பாய்க் காட்டுகிறது, சபை அப்போஸ்தலர், தீர்க்கதரிசிகள் என்பவர்களுடைய "அஸ்திபாரத்தின் மேல்கட்டப்பட்டது[18] என்று பவுல் கூறும் போது, கிறிஸ்து தாமே அதற்கு மூலைக் கல்லாயிருக்கிறார்" (காண்க வெளிப்படுத்தின விசேஷம் 21:14).*

*இந்த வசன அமைப்பைக் குறித்த மற்றொரு கண்ணோட்டம் "இந்தக் கல்" என்பது இயேசுவை "ஜீவனுள்ள தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து" என்று பேதுரு செய்த அறிக்கையைச் சுட்டிக் காட்டுகிறது (16:16). பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசனமாக தேவனுடைய புதிய வீடு கட்டப்படும் கன்மலையாக மேசியா இருப்பார் என்று சொல்லப்பட்டது (சங்கீதம் 118:22; ஏசாயா 28:16; தானியேல் 2:44, 45). சபை கட்டப்பட்ட அஸ்திபாரம் இயேசுவே என்று புதிய ஏற்பாடு உறுதிப்படுத்துகிறது (21:42; நடபடிகள் 4:10-12; 1 கொரிந்தியர் 3:11; 1 பேதுரு 2:4-8). இந்த விஷயத்தில் அஸ்திபாரம் என்பது இயேசு தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து எனும் சத்தியமே பாறை (இந்தக்கல்), என்று பேதுரு இயேசுவைக்குறித்து அறிக்கையிட்டார். கிறிஸ்து விடத்தில் வருகிற ஒருவர் தான் ஞானஸ்நானம் பெறுவதற்கு முன் இந்த அறிக்கையைச் செய்கிறார் (நடபடிகள் 8:37), இதிலேதான் அவர் கிறிஸ்துவுடன் இணைந்து அவருடைய சபையில் சேர்க்கப்படுகிறார் (நடபடிகள் 2:41; ரோமர் 6:3-5; 1 கொரிந்தியர் 12:13; கலாத்தியர் 3:26, 27), இந்த வகையில் அந்த நல்ல அறிக்கை ஜீவனுள்ளதாயும், சபையின் அஸ்திபாரத்தில் கிரியை செய்யக் கூடியதாகவுமிருக்கிறது.*

J. W. McGarvey *இந்த ஸ்தானத்தை இராஜ்யத்துடன் (சபையுடன்) மலையின் மேல் கட்டப்பட்ட ஒருபட்டணத்தை ஒப்பிடுகிறார். இதன் ஸ்தாபகர் கிறிஸ்துவானதால் (16:18) பேதுரு திறவுகோல்களையுடைய வாயிற் காப்போனாக இருக்கிறார் (16:19), என்று கூறும்போது வேறு ஏதோ ஒன்றுதான் "இந்தக் கல்" எனும் வார்த்தையாக இருக்க வேண்டும். உடனடி வசனமே நல்ல*

அறிக்கைதான் அந்தக் கல்லாகிய அஸ்திபாரம் என காட்டுகிறது (16:16, 17). மெக்கார்வே எழுதினார்,

> கிறிஸ்தவ அமைப்பு முறையில், ஜீவனுள்ள தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து அவரே என்கிற, இந்த சத்தியம்தான் மிகவும் அடிப்படையான உண்மை - இதன் மேல் தான் மேலான முழு அமைப்பும் சார்ந்திருக்கிறது; ஆதலால் அது முறையாக கன்மலைக்கான விளக்கத்தை இரட்சகருடைய காட்சியில் முன் வைக்கப்பட வேண்டும்.[19]

மெக்கார்வே அளிக்கிற இந்தக் கண்ணோட்டம் மிகவும் பாராட்டுதலுக்குரியது. அந்த வசனப்பகுதி, வார்த்தை நுணுக்கம், பின் தொடருகிற புதிய ஏற்பாட்டு உபதேசம் ஆகியவை உருவாக்கும் எந்தக் காரியமும் புறம்பே தள்ளி விடலாகாது.

இயேசு தன்னுரிமை கொண்டாடும் பிரதி பெயர்ச்சொல்லைப் பயன்படுத்தி தாம் கட்டுவதாகத் திட்டமிட்டதை "என்" என்று குறிப்பிட்டார். அவர் பயன்படுத்தின "சபை" எனும் (*ekklēsia*) பதம்தான் முதல் முறையாக புதிய ஏற்பாட்டில் பயன்படுத்தப்பட்ட இடம் இது. சுவிசேஷ எழுத்தாளர்களில் மத்தேயு தான் முதல் முறையாக இந்த வார்த்தையை பயன்படுத்தினார் (16:18; 18:17). "உள்ளூர் சபை" அல்லது "கூடிவரும் கூட்டத்தைக்" குறிப்பிட[20] *எக்லீசியா* எனும் வார்த்தை புதிய ஏற்பாட்டில் 114 முறை பயன்படுத்தப்பட்டுள்ளது. இது உலகளாவிய சபையையோ (எபேசியர் 1:22; 5:23), ஒரு பிராந்தியத்தில் உள்ள சபையையோ (1 கொரிந்தியர் 16:1), ஒரு உள்ளூர் சபையையோ (1 கொரிந்தியர் 1:2), மற்றும் ஒன்றாக கூடிவருகிற கூட்டத்தையோ குறிக்கலாம் (1 கொரிந்தியர் 11:18; 14:28). மத்தேயு 16:18ல் இயேசு சபையைக் குறிப்பிட்டபோது அவர் *ekklēsia* என்ற வார்த்தையை பயன்படுத்தினார். அவர் உலகளாவிய சபையைக் குறிப்பிட்டார். சபை கிறிஸ்துவுக்குரியது; அவர் தமது சிலுவையின் இரத்தத்தினாலே கிரயத்துக்கு அதை வாங்கினார் (நடபடிகள் 20:28; 1 பேதுரு 1:18, 19; காண்க 1 கொரிந்தியர் 6:20). Robert H. Gundry சிந்தனை என்னவெனில், மத்தேயு புத்தகத்தில், "என் சபையை" என்று குறிப்பிடப்பட்ட வார்த்தை, "அவர்களுடைய [உங்களுடைய] ஜெப ஆலயம் (யங்கள்)" என்று குறிப்பிடப்படுவதற்கு முரணானது (4:23; 9:35; 10:17; 12:9; 13:54; 23:34).[21]

மேற்கொண்டு இயேசு பேதுருவிடத்தில் **பாதாளத்தின் வாசல்கள் அதை மேற்கொள்வதில்லை** என்றும் சொன்னார். KJV "நரகத்தின் வாசல்கள்" என்று குறிப்பிடப்பட்டுள்ளது, "பாதாளம்" எனும் வார்த்தையை தவறுதலாக புரிந்து கொள்ள இது வழிவகுக்கும். புதிய ஏற்பாட்டில் (*Haidēs*) "பாதாளம்" என்பது, மரித்தோர் இருக்கும் இடத்தை குறிப்பது, வழக்கமாக "நரகத்திலிருந்து" (*gehenna*), வித்தியாசப்பட்ட வார்த்தை இது, இது (நரகம்) இறுதி தண்டனையளிக்கப்படும் இடம். Jack P. Lewis என்பவர் KJV மொழிபெயர்க்கப்பட்டபோது ஆங்கிலத்தில் இரண்டு கிரேக்க வார்த்தையையும் குறிப்பிடத் தக்கதாக "நரகம்" எனும் வார்த்தையை பயன்படுத்தினர். அந்த நேரத்தில், "பாதாளம்" எனும் வார்த்தை ஆங்கிலத்தில் அறிமுகமாக துவங்கியிருந்த நேரம். இங்கு இந்த வசனத்தில், மிக

சமீபத்திய மொழிபெயர்ப்புகளிலெல்லாம் “பாதாளத்தின் வாசல்கள்” என்றோ அல்லது அதற்குச் சமமான வார்த்தையோ பயன்படுத்தப்பட்டுள்ளது[22] என்று சொன்னார்.

பழங்கால உலகில், வாசல்கதவுகள் ஒரு பட்டணத்தின் பாதுகாப்புக்கு மிகவும் அவசியமானதாக இருந்தது, அவைளைக் கொண்டு அதன் பலத்தை அறிந்து கொள்ள ஒரு சுட்டிக் காட்டும் அடையாளம் அவை, கிரேக்க வார்த்தையான “பாதாளம்” (*Haidēs*) “சியோல்” (*She'ol*); எனும் எபிரெய மொழி வார்த்தையுடன் ஒத்துப் போயிற்று; இரண்டு பதங்களும் மரணத்தின் எல்லையைக் குறிப்பவைதான். இயேசு இரண்டு கருத்துக்களையும் ஒன்றாக்கி “வாசல்கள்” மற்றும் “பாதாளம்” என்று குறிப்பிட்டு மரணத்தின் வலிமையையும் எல்லையையும் கூறினார் (காண்க RSV; TEV; NEB; REB). இவை “பாதாளத்தின் [சீயோலின்] வாசல்கள்” மற்றும் “மரணத்தின் வாசல்கள்” என்று குறிப்பிட்டு பழைய ஏற்பாடு உறுதிப்படுத்துகிறது (யோபு 17:16 [NIV]; 38:17; சங்கீதம் 9:13; 107:18; ஏசாயா 38:10). கிரேக்க இலக்கியத்தில், “பாதாளத்தின் வாசல்கள்” எனும் சொற்றொடர்கள் மரணத்தின் கூர் மற்றும் அதின் ஆதிக்கம் ஆகியவற்றையும் குறிக்கிறது.[23] தள்ளுபடி ஆகமத்தில் ஒரு புத்தகம் “ஜீவியத்தின் மேலும் மரணத்தின் மேலும் வல்லமை” தேவனுக்கே உரியது, “அவர் மாம்சமானவர்களை பாதாளத்தின் வாசல்களில் இறக்கி, மறுபடியும் எழும்பப் பண்ணுகிறார்” என்று சொல்லுகிறது.[24]

இயேசு பாதாளத்தின் வாசல்கள் (மரணத்தின் வலிமை) “அதை மேற்கொள்ள மாட்டாது” என்றார். அவர் சொன்னதின் பொருள் என்ன? குறைந்த பட்சம் இரண்டு விளக்கங்கள் சாத்தியமாகும். ஒன்று பிரதிப்பெயர்ச் சொல்லாகிய “அதை” என்பது சபையைக் கட்டுவதை சுட்டிக் காட்டுகிறது. தமது இராஜ்யத்தை ஸ்தாபிப்பதை இயேசுவின் மரணம் தடை செய்ய முடியாது. உடனடியாகத் தொடர்ந்து வரும் வசனப்பகுதியில் தமது மரணம், உயிர்த்தெழுதலைக் குறித்து கர்த்தர் முன்னறிவித்த இந்தக் கருத்திலிருந்து அறிகிறோம் (16:21). பெந்தெகோஸ்தே நாளில், பேதுரு பிரசங்கித்து, “தேவன் அவருடைய மரண உபத்திரவங்களின் கட்டை அவிழ்த்து, அவரை எழுப்பினார்; அவர் மரணத்தினால் கட்டப்பட்டிருக்கக் கூடாதிருந்தது”; “அவன் கிறிஸ்துவினுடைய ஆத்துமா பாதாளத்தில் விடப்படுவதில்லையென்றும் முன்னறிந்து, அவர் உயிர்த்தெழுதலைக் குறித்து இப்படிச் சொன்னான்” (நடபடிகள் 2:24, 31). பவுல் “மரித்தோரிலிருந்து எழுந்த கிறிஸ்து இனி மரிப்பதில்லை என்று அறிந்திருக்கிறோம்; மரணம் இனி அவரை ஆண்டு கொள்ளுவதில்லை,” என்று எழுதினார் (ரோமர் 6:9; NRSV). இருப்பினும், பிரதி பெயர்ச்சொல்லை தாம் கட்டப்போவதாகச் சொன்ன சபையாக இருப்பினும், அது பொதுவான பாலில் பேசப்பட்டது என்று நாம் எதிர் பார்க்கலாம்.

இரண்டாவது விளக்கம் என்னவெனில் பிரதிப் பெயர்ச் சொல் அதை (*autēs*) என்பது பெண் பாலில் இருக்கிறது, இது சபையையே குறிக்கிறது. இந்த விளக்கத்தை எடுத்துக் கொண்டு கர்த்தருடைய இராஜ்யம் நித்தியமானதென்றும், என்றைக்கும் அழியாததென்றும் நாம் தீர்மானிப்போம் (தானியேல் 2:44). மிகவும் குறிப்பாக, துன்புறுத்தலினால் அது நிறுத்தப்பட முடியாது என நாம் சொல்லுவோம். இந்த கருத்தும் இந்த அதிகாரத்தின்

*சந்தர்ப்பப்பொருளில் காணப்படுகிறது. இயேசு தமது பின்பற்றாளர்களிடம், இரத்த சாட்சிகளாக மரிக்க வேண்டியிருந்தாலும் தங்களை வெறுத்து, அவருக்குப் பின்செல்லும் படி புத்திகூறினார் (16:24-27).*

*குறிப்பிட வேண்டிய இன்னொரு உண்மையான கருத்து என்னவெனில், கிறிஸ்தவர்களை பிடித்து வைக்கும் வல்லமை, மரணத்துக்குக் கிடையாது எனலாம் (1 கொரிந்தியர் 15:50-57). வெளிப்படுத்தின விசேஷத்தில், இயேசு "மரணத்துக்கும் பாதாளத்துக்குமுரிய திறவுகோல்களை" உடையவராயிருக்கிறார் என்று கிறிஸ்துவைப் பற்றி சித்தரிக்கப்படுகிறது (வெளிப்படுத்தின விசேஷம் 1:18). கடைசியாக, "மரணமும் பாதாளமும்" தங்களிலுள்ள மரித்தோரை ஒப்புவித்தன; அப்பொழுது மரணமும் பாதாளமும் அக்கினிக்கடலிலே தள்ளப்பட்டன என்று சொல்லப்படுகிறது (வெளிப்படுத்தின விசேஷம் 20:13, 14).*

## இயேசு: "இராஜ்யத்தின் திறவுகோல்களை நான் உனக்குத் தருவேன்" (16:19, 20)

***19**பரலோகராஜ்யத்தின் திறவுகோல்களை நான் உனக்குத் தருவேன்; பூலோகத்திலே நீ கட்டுகிறது எதுவோ அது பரலோகத்திலும் கட்டப்பட்டிருக்கும், பூலோகத்திலே நீ கட்டவிழ்ப்பது எதுவோ, அது பரலோகத்திலும் கட்டவிழ்க்கப்பட்டிருக்கும் என்றார்.*

***20**அப்பொழுது, தாம் கிறிஸ்துவாகிய இயேசு என்று ஒருவருக்கும் சொல் லாதபடிக்குத் தம்முடைய சீஷர்களுக்குக் கட்டளையிட்டார்.*

***வசனம் 19.** தமது சபையைத் தாம் கட்டுவதாகச் சொன்ன பிறகு (16:18), **பரலோகராஜ்யத்தின் திறவுகோல்களை நான் உனக்குத் தருவேன்** என்று இயேசு பேதுருவுக்கு வாக்குத்தத்தம் செய்தார். "சபை" மற்றும் "இராஜ்யம்" எனும் பதங்களை மாறிமாறி அவர் பயன்படுத்துகிறார் என்று தோன்றுகிறது. தமது அப்போஸ்தலரின் வாழ்நாள் காலத்திலேயே இராஜ்யம் (சபை) வரும் என்று கிறிஸ்து வாக்குத்தத்தம் பண்ணினார் (16:28), மற்ற வசனப்பகுதிகளும் முதல் நூற்றாண்டின் இரண்டாம் பகுதியில் நிகழ்கால நடந்தேறுதலைப்போல சுட்டிக்காட்டுகின்றன (கொலோசெயர் 1:13; எபிரெயர் 12:28; வெளிப்படுத்தின விசேஷம் 1:9).*

*பூட்டப்பட்ட கதவுகளைத் திறக்க திறவுகோல்கள் பயன்படுத்தப்படும்; நுழைவதற்கான முக்கியத்துவமான கருவிகள் அவை.[25] வசனங்களில், "திறவுகோல்கள்" அடிக்கடி உருவகமாகவும், ஒரு குறிப்பிட்ட எல் லைக்குரிய அதிகாரத்தையும் பொறுப்பையும் சுட்டிக்காட்டுவதாகப் பேசப்பட்டுள்ளது (ஏசாயா 22:22; வெளிப்படுத்தின விசேஷம் 1:18; 3:7; 9:1; 20:1). பெந்தெகொஸ்தே நாளில், பேதுரு திறவுகோல்களைப் பயன்படுத்தி சுவிசேஷத்தைப் பிரசங்கித்தார் - அதினால் யூதர்களுக்கு இராஜ்யத்தின் கதவுகளைத் திறந்து விட்டார் (நடபடிகள் 2:14-42). சிலகாலம் கழித்து, அதே திறவுகோல்களைப் பயன்படுத்தி புறஜாதிகளுக்காக இராஜ்யத்தின் கதவுகளைத் திறந்து விட்டார் (நடபடிகள் 10:34-48; 15:7).*

ஆகிலும், இந்தக் திறவுகோல்கள் பேதுருவின் தனிப்பட்ட அதிகாரத்தை குறிப்பதில்லை; மற்ற அப்போஸ்தலர்களுக்கும் இதே அதிகாரம் கொடுக்கப்பட்டிருந்தது (28:18-20; மாற்கு 16:15, 16; லூக்கா 24:47; நடபடிகள் 2:14). எல்லாவற்றிற்கும் மேலாக, திறவுகோல்கள் மற்ற சீஷர்களாலும் பயன்படுத்தப்பட்டன, அவர்கள் தங்களுடைய சுவிசேஷப் பிரசங்கத்தை கேட்டவர்களுக்கு பரலோகத்திற்கான வழியை திறந்து விட்டார்கள் (நடபடிகள் 8:4-13, 26-40; 16:14, 15, 25-34). இன்று உலகெங்கும் கிறிஸ்துவின் சுவிசேஷத்தை பகிர்ந்து கொள்ளும் விசுவாசமுள்ள கிறிஸ்தவர்களால் திறவுகோல்கள் பயன்படுத்தப்படுகின்றன.

சுவிசேஷத்தைப் பிரசங்கிக்க ஏதுவாக அதிகாரமாகிய "திறவுகோல்கள்" அதன் மூல துவக்கம் யூதமார்க்கத்திலிருந்து வந்தது. "திறவுகோல் ஒன்றை ஒப்படைப்பது வேதபாரகன் பிரதிஷ்டை செய்யப்படும்போது" நடைமுறைப்படுத்தும் ஒன்றாக இருந்தது.[26] யூதர்களின் சட்டத் தொகுப்பில், திறவுகோல்கள் என்பது ரபீமார்களின் போதிக்கும் அதிகாரத்தைக் குறித்துப் பேசுப்படுகிறது.[27] இயேசு "ஜனங்கள் பிரவேசிக்காதபடிக்கு பரலோகத்தின் கதவுகளை மூடிவைத்த [அல்லது பூட்டி வைத்த]" வேதபாரகரையும் பரிசேயரையும் கடிந்து கொண்டு சாடினார் (மத்தேயு 23:13). "அறிவாகிய திறவுகோலை எடுத்து விட்டார்கள்" என்று நியாயசாஸ்திரிகளை எதிர்த்தார் (லூக்கா 11:52). அவர்கள் சுய சட்டங்களின் சார்புடைமையையும் மாய்மாலத்தையும் கொண்டிருந்தமையால், இந்த மதத்தலைவர்கள் இயேசுவைப் பற்றிய சத்தியத்தை அறிந்து கொள்வதிலும் வசனங்களின் உண்மையான அர்த்தத்தைப் புரிந்து கொள்வதில் ஜனங்களுக்கு சிக்கல்களை ஏற்படுத்தினர். ஆகையால் ஜனங்கள் இராஜ்யத்துக்குள் நுழைவதற்கு அவர்கள் ஊக்கமிழக்கச் செய்தனர்.

இயேசு தொடர்ந்து பேதுருவிடத்தில், **பூலோகத்திலே நீ கட்டுகிறது எதுவோ அது பரலோகத்திலும் கட்டப்பட்டிருக்கும், நீ பூமியிலே கட்டவிழ்ப்பது எதுவோ அது பரலோகத்திலும் கட்டவிழ்க்கப்பட்டிருக்கும்** என்றார். ஒரு குறுகிய இடைவெளிக்குப் பின்பு இதே வாக்குத்தத்தத்தை தமது எல்லா அப்போஸ்தலருக்கும் இயேசு கொடுத்தார் (18:18). NASB யில் முழுமையான வினைச்சொல் விவரித்துப் பேசப்படுகிறது ("கட்டப்பட்டிருக்கும்" "அவிழ்க்கப்பட்டிருக்கும்") என்று இரண்டு வசனங்களிலும் ஒரேமாதிரி சொல்லப்படுகிறது. சபையில் தங்கள் அதிகாரத்தின் கீழ் சட்டங்களை இயற்றும்படி இயேசு பேதுருவுக்கும் மற்ற அப்போஸ்தலருக்கும் அங்கீகாரம் அளிக்கவில்லை. மாறாக, இயேசு பரமபிதாவினிடத்திலிருந்து பெற்றதும் - அவர்களுக்கு இயேசு தாமே கட்டளையிட்டதுமான சத்தியங்கள் எல்லாவற்றையும் பரிசுத்த ஆவியினால் ஏவப்பட்டு அவர்கள் போதிக்க வேண்டியவர்களாயிருந்தார்கள் (28:20; யோவான் 14:15-17, 26; 15:26, 27; 16:12-15).

"கட்டுதல்" "அவிழ்த்தல்" எனும் பதங்கள் இயேசுவின் நாட்களில் நன்கு அறியப்பட்டவை, யூதர்களின் சிந்தனைகளைக் கொண்ட பலதரப்பட்ட கொள்கைகளில் அடிக்கடி பயன்படுத்தப்படுபவை, தேவைப்படுகிற தேவைப்படாத. அதிகாரமுள்ள (அனுமதிக்கப்பட்டுள்ள) அதிகாரமற்ற (அனுமதிக்கப்படாத) யாவற்றையும் விவரித்துக்காட்டுகிற வார்த்தைகள் இவை

ரபீக்களின் இலக்கியங்களிலிருந்து லைட்புட் என்பவர் பல உதாரணங்களைப் பட்டியலிட்டு தொகுத்துக்கொடுத்திருக்கிறார். அவற்றில் பெரும்பாலானவைகள் மாற்றத்தை விரும்பாத பழமைவாத ஸாம்மாய் கொள்கைகாரர்களுக்கும், ஹில்லல் எனும் மார்க்க சுதந்தரவாதிகளுக்குமிடையே எதிரெதிரான வாதங்கள் இருந்தன. இந்த மேற்கோள் வாக்கியங்களில் பெரும்பாலானவைகள் "ஸாம்மாய் கொள்கை வாதிகள் கட்டுகிறார்கள், ஹில்லல் கொள்கை வாதிகள் கட்டவிழ்க்கின்றனர்" என்று சொல்லப்படுகிறது.[28]

பேதுருவும் மற்ற அப்போஸ்தலர்களும் கட்டுதல் அவிழ்த்தல் என்பதை எப்படி சரியாக செயல்படுத்தினார்கள்? நடபடிகள் 2ம் அதிகாரம் தொடங்கி, இயேசு அவர்களுக்கு ஏற்கனவே போதித்தபடி - அவர்கள் கேட்டதெல்லாம் விசுவாசம், மனந்திரும்புதல், ஞானஸ்நானம்தான் பாவமன்னிப்புக்கும் சபையில் சேர்க்கப்படுவதற்கும் அவசியம் என்றனர் (நடபடிகள் 2:38-41). அப்போஸ்தலர்களின் பாவமன்னிப்பிற்கான இந்தப் பதங்கள் யோவான் 20:23 போன்ற கடினமான வசனப்பகுதிகளைத் தெளிவாக்குகிறது: "எவர்களுடைய பாவங்களை மன்னிக்கிறீர்களோ அவைகள் அவர்களுக்கு மன்னிக்கப்படும், எவர்களுடைய பாவங்களை மன்னியாதிருக்கிறீர்களோ அவைகள் அவர்களுக்கு மன்னிக்கப்படாதிருக்கும்." பாவங்களை அவர்கள் மன்னிப்பது என்பதற்கான ஒரே அர்த்தம் இரட்சிப்படைய இயேசு எவைகளைக் கேட்டாரோ அவைகளைச் சொல்லுவதுதான். காலம் கடந்து செல்லச் செல்ல, அப்போஸ்தலர்கள் சபைக்கடுத்தவைகளையும் விசுவாசமுள்ள கிறிஸ்தவ ஜீவியத்துக்கடுத்தவைகளையும் குறித்த எல்லாவற்றையும் போதித்தார்கள். ஆரம்பகால விசுவாசிகள் அவர்களுக்கு இருந்த அதிகாரத்தை ஏற்றுக் கொண்டு "அப்போஸ்தலருடைய உபதேசத்துக்குத்" தங்களை அர்ப்பணித்தார்கள் (நடபடிகள் 2:42). இந்த உபதேசம் மீறப்படும்போது, ஏவப்பட்ட அப்போஸ்தலர்கள் சபையின் ஒழுங்கு நடவடிக்கைக் காரியங்களிலும் தங்கள் அதிகாரத்தை பயன்படுத்தினார்கள். அனனியாவும் சப்பீராளும் பரிசுத்த ஆவியினிடத்தில் பொய் பேசின போது பேதுரு அவர்களை எதிர் கொண்டார் (நடபடிகள் 5:1-11). அற்புதவரங்களை மற்றவர்களுக்கு கொடுக்கக்கூடிய வல்லமையை கிரயத்துக்கு வாங்க முயற்சித்த சீமோனையும் கடிந்து கொண்டார் (நடபடிகள் 8:18-24).

**வசனம் 20.** இந்த உரையாடலைத் தொடர்ந்து, தம்மைப் பின்பற்றினவர்களிடம் இயேசு **தாம் கிறிஸ்து என்று ஒருவரிடமும் சொல்லாதபடிக்குக் கட்டளையிட்டார்.** பேதுரு இயேசுவே கிறிஸ்து என்றும் தேவனுடைய குமாரன் என்றும் அறிக்கையிட்டிருந்தார் (16:16) மற்ற அப்போஸ்தலர்களும் இந்த நிச்சயத்தைப் பகிர்ந்து கொண்டிருந்தனர் என்பதில் சந்தேகமில்லை (14:33). எப்படியிருப்பினும், அவரும் பன்னிருவரில் மற்றவர்களும் இதன் பொருள் என்ன என்பதைக் குறித்த ஒரு மேலோட்டமான புரிந்து கொள்ளுதல் மட்டுமே கொண்டிருந்தனர். பின்னதாக இயேசு அதன் பொருள் என்ன என்பது குறித்து ஒரு முழு விளக்கத்தைக் கொடுக்க வேண்டியிருந்தது (16:21). அவரது பூமிக்குரிய காலம் முடிவை நெருங்கிக் கொண்டிருந்த நேரம், ஆகிலும் அவர்தம் அடையாளம், குறிக்கப்பட்ட காலத்துக்கு முன்பே பொதுவாக வெளியாகியிருந்தால். தேவனுடைய திட்டத்தின் படியான அவரது ஊழியம்

*ஆபத்துக்குள்ளாகியிருக்கும். காலம் சரியான நிறைவேற்றத்தில் இருந்தபோது, தாம் யார் என்று தைரியமாய் வெளிப்படுத்துவதில் இயேசு பின்வாங்கவில்லை (26:63, 64; 27:11).*

✧✧✧✧✧ **பாடங்கள்** ✧✧✧✧✧

## இயேசுவின் பிரதிரூபங்கள் *(16:13-20)*

*மத்தேயு 16:13-20 எல்லாவற்றிலும் முக்கியமான கேள்வியாகிய இயேசு யார் என்பதை விவாதிக்கிறது. ஒரு மார்க்கச் செய்திதாளில் அதன் ஆசிரியர் "இயேசுவின் நான்கு பிரதிரூபங்கள்" எனும் தலைப்பில் விவாதித்தார்.[29] இயேசுவை நாம் எதிலே விசுவாசிக்கிறோம்? உலக வர்த்தக முதலீட்டவராக ஒரு சந்தைப்படுத்தும் மேசியாவாகவா? இடதுசாரி நசரேயனாக, இது வரை இருந்த நிலையை கீழே தள்ளி சமுதாயத்தை உயர்த்த வந்த சமாதானமும் நீதியுமுள்ள இயேசுவையா? புதிய ஏற்பாடு சித்தரித்துக் காட்டும் கிறிஸ்துவை சபைக்கு போய் கொண்டே சந்தேகப்படும் பரியாசக்காரர்களுக்கு முன்பாக அமைதியே - உருவாக - நிற்கும் (தேவ) ஆட்டுக்குட்டியாகிய இயேசுவையா? தமது இரண்டாம் வருகையில் சகலத்தையும் பட்சித்துப்போடும் காட்சி கண்டு உலகமே தீயது என்று எண்ணி எல்லாவற்றிலும் கவலை கொள்ளும் நபர்களால் தேவனைக் காட்டிலும் சாத்தானுக்கே அதிக வல்லமை என்று சொல்லி மறுதண்டனை வழங்கப்படும் மீட்பரையா?*

*பரிகசிக்கப்படும் கிராமமான நாசரேத்திலிருந்து வந்த இந்தத் தச்சன் யார்? நாசரேத் ஊரானாகிய இயேசு உண்மையிலேயே தேவனுடைய குமாரன் தானா அல்லது அவருக்குப் பின் வந்த அநேக எத்தர்களில் அவரும் ஒருவரா? தவறுடன் ஒத்துப்போகும் சிலர் அவர் ஒரு பெரிய மகான், தத்துவ ஞானி, வாழ்ந்த மனிதர்களிலேயே மிகப் பெரிய போதகர், மற்றும் தலைவர், அல்லது ஒருவேளை தீர்க்கதரிசியாகக் கூட இருக்கலாம், ஆகிலும் அவர் தேவனுடைய குமாரனல்ல, என்று சொல்லி திருப்திபட முயற்சிக்கின்றனர். ஒரு மத்திய நிலைமைக்கு அங்கே இடமில்லை. ஒன்று இயேசு தாம் குறிப்பிட்டபடியான எல்லாமுமாக இருக்க வேண்டும், இல்லையேல் இதுவரை உலகம் கண்டிராத மிக மோசமான ஒரு மோசடி பேர்வழியாகவும் பொய்யனாகவும் இருந்திருக்க வேண்டும்.*

## இயேசுவின் அடையாளம் *(16:13-20)*

*இயேசுவின் அடையாளத்தை நாம் அறிந்து கொள்வது எப்படி?*

*1. கிறிஸ்துவின் உரிமைகோருதலுக்கு வேதாகம சான்றுகள். யோவான் ஸ்நானன் சாட்சியிட்டு தாம் வழியை ஆயத்தப்படுத்தும்படி வந்தது கிறிஸ்துவுக்காகவே, உலகத்தின் பாவங்களைச் சுமந்து தீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டி அவரே, தேவனுடைய குமாரன்அவரே என்று சொன்னார், (யோவான் 1:29-34; காண்க 5:33-35).*

*தேவன் இயேசுவைத் தமது குமாரன் என்று இரண்டு இடங்களில்*

*அறிவித்தார்: அவருடைய ஞானஸ்நானத்தின்போது (3:16, 17), அது தீர்க்கதரிசனத்தின் நிறைவேற்றமாயிருந்தது (ஏசாயா 11:1, 2), மற்றும் மறுரூபமலையிலும் அறிவிக்கப்பட்டார் (17:5; லூக்கா 9:35). பின்னதாக பேதுரு இந்நிகழ்ச்சி குறித்து எழுதினார், அதில் அவரும், யாக்கோபு மற்றும் யோவானோடு கூட, "இந்தச் சத்தத்தை தாம் கேட்டதாக" சொல்லுகிறார் (2 பேதுரு 1:17, 18; காண்க யோவான் 5:37, 38).*

தாம் செய்து வருகிற கிரியைகள் பிதாவானவர் தம்மை அனுப்பினதாக சாட்சியிடுகிறது என்று இயேசு சொன்னார் (யோவான் 5:36). பவுல் குறிப்பிடுகிறபடி, மிகவும் அசைக்க முடியாத சாட்சியம், அவருடைய உயிர்த்தெழுதல், அதினால் "பலமாய் ரூபிக்கப்பட்ட தேவனுடைய குமாரனாயிருக்கிறார்" (ரோமர் 1:4) என்றார்.

*2. தீர்க்கதரிசன நிறைவேற்றம்.* வசனங்கள் எண்ணற்ற மேசியாத்துவ தீர்க்கதரிசனங்களைக் கொண்டுள்ளது. இவைகள் இயேசுவிலே நிறைவேறியதாக, அடிக்கடி மத்தேயுவில் குறிப்பிடப்படுகிறது:

- ஒரு முன்னோடியைக் குறித்து முன்னுரைக்கப் பட்டது (ஏசாயா 40:3; மல்கியா 3:1; 4:5; மத்தேயு 3:3).
- அவர் (இயேசு) ஒரு கன்னிகையினிடத்தில் பிறப்பார் (ஏசாயா 7:14; மத்தேயு 1:18-25).
- அவருடைய பிறப்பின் தோராயமான காலம் கொடுக்கப்பட்டது (தானியேல் 9:25; லூக்கா 2:1-7).
- அவருடைய பிறப்பின் இடமும் பெயர் குறிப்பிட்டுச் சொல்லப்பட்டது (மீகா 5:2; மத்தேயு 2:1-6).
- அவருடைய பிறப்பிலே ஒரு நட்சத்திரமும் சம்பந்தப்பட்டிருந்தது (எண்ணாகமம் 24:17; மத்தேயு 2:2).
- அவருடைய பிறப்பின் தேசம் (ஆதியாகமம் 12:1-3), கோத்திரம் (ஆதியாகமம் 49:10), குடும்பம் (ஏசாயா 11:1; ஏரேமியா 23:5) ஆகிய அனைத்தும் முன்னுரைக்கப்பட்டது (மத்தேயு 1:1-6).

இவைகள் அனைத்தும் முன்னுரைக்கப்பட்டபடியே நிறைவேறியது, கூடுதலாக, மேசியாவின் வாழ்வின் நிகழ்ச்சிகளிலும் அநேகக் காரியங்கள் முன்னுரைக்கப்பட்டிருந்தன:

- அவர் "எகிப்திலிருந்து" வரவழைக்கப்படுவார் (ஓசியா 11:1; மத்தேயு 2:15).
- அவர் பெரிய கிரியைகளைச் செய்வார் (ஏசாயா 35:5, 6; மத்தேயு 11:2-5).
- அவர் புறக்கணிக்கப்படுவார் (ஏசாயா 53:3; யோவான் 1:11).

அவருடைய மரணத்தில் சம்பவிக்கப் போகிற நிகழ்வுகளும் முன்னுரைக்கப்பட்டிருந்தன:

- காட்டிக்கொடுக்கப்படுவதற்கான கூலியைக் குறித்தும், அந்தப் பணம் என்ன செய்யப்படும் என்பது குறித்தும் குறிப்பிடப்பட்டது (சகரியா

*11:12, 13; மத்தேயு 27:3-10).*

- *அவரை விசாரிக்கிறபோது அவரது நடந்து கொள்ளும் விதமும் அவருடைய மனதின் உணர்வுகளும் விவரிக்கப்பட்டிருந்தது (ஏசாயா 53:7-9; மத்தேயு 27:12-14; நடபடிகள் 8:32-35).*
- *அவர் மரிக்கும் விதம் முன்னுரைக்கப்பட்டிருந்தது (சங்கீதம் 22:16-18; மத்தேயு 27:35).*
- *அவருடைய எலும்புகளில் ஒன்றும் முறிக்கப்படுவதில்லை (சங்கீதம் 34:20; யோவான் 19:32, 33).*
- *குறிப்பிடத்தக்க கல்லறையில் அவர் அடக்கம் பண்ணப்படுவார் (ஏசாயா 53:9; மத்தேயு 27:60).*

*இறுதியாக, அவருடைய உயிர்த்தெழுதல் (சங்கீதம் 16:10; நடபடிகள் 2:31) மற்றும் அவருடைய பரமேறுதல் (சங்கீதம் 68:18; நடபடிகள் 1:9, 10; எபேசியர் 4:8) ஆகியவைகளும் முன்னுரைக்கப்பட்டு நிறைவேறியது.*

*3. மற்றவர்களின் சாட்சியங்கள். (கி.பி. இரண்டாம் நூற்றாண்டில் வாழ்ந்த)ஆரம்ப கால கிறிஸ்தவத்தின் எதிர்ப்பாளர், செல்சஸ் கிறிஸ்து அற்புதங்கள் நடப்பித்ததை ஒப்புக்கொண்டு, அந்த வல்லமை அவருக்கு எங்கிருந்து வந்தது என்பதே தனது கேள்வி என்பதையும் தெரிவித்தான்.*[30] Justin Martyr *(கி.பி. இ. 100-இ. 165), கிறிஸ்து ஏசாயாவின் தீர்க்கதரிசனத்தை நிறைவேற்றி சகலவிதமான வியாதிகளையும் நோய்களையும் சுகப்படுத்தினார் என்று சொன்னார். அவர், "பொந்தியு பிலாத்துவின் நடபடிகளிலிருந்து நீங்கள் [அவர் இந்த செய்கைகளை செய்தார் என்று] அறிந்து கொள்ளலாம்" என்று எழுதினார்.*[31] *ஜோசிபஸ், எனும் யூத வரலாற்று ஆசிரியன், எழுதுகிறதாவது,*

> *இப்பொழுது, ஏறத்தாழ இதே காலக்கட்டத்தில், அவரை மனிதன் என்று அழைப்பது அதிகாரமளிக்கப்பட்டிருப்பின், ஒரு ஞானமுள்ள மனிதன், அற்புதக் கிரியைகளை செய்யக் கூடியவராக இருந்தார் - அப்படிப்பட்ட போதகர்களின் சத்தியத்தை சந்தோஷமாய் வாங்கலாம். அவர் அநேகம் யூதர்களையும், அநேக புறஜாதி மக்களையும் தன்பக்கம் இழுத்தார். அவர் [தான்] கிறிஸ்து; நம்மில் இருந்த முதன்மை மனிதர்களின் ஆலோசனைகளைக் கேட்டு, பிலாத்து, அவருக்கு சிலுவை ஆக்கினைத் தீர்ப்பைக் கொடுத்தான், அவரை ஆதியிலிருந்தே அன்பு செலுத்தினவர்கள் அவரை கைவிடவில்லை, அவர் மூன்றாம் நாளில் உயிரோடிருக்கிறவராய் அவர்கள் முன் தோன்றினார், அவரைக் குறித்து இவைகளையும் இன்னும் பதினாயிரங்களான அதிசயங்களையும் தெய்வீக தீர்க்கதரிசிகள் முன்னுரைத்தபடியே நிறைவேறின; மற்றும் கிறிஸ்தவக் கோத்திரம், அவரிடமிருந்து இப்பெயரைப் பெற்றது; அவை இந்நாட்களில் கூட முடிவு பெறவில்லை.*[32]

*ஜோசிப்பஸின் அறிக்கை கிறிஸ்து "நன்மை செய்கிறவராய் சுற்றித் திரிந்து" தமது ஜீவியகாலத்தில் ஊழியம் செய்தார் என்பதை உறுதிப்படுத்துகிறது (நடபடிகள் 10:38).*

## *நாசரேத்து ஊரானாகிய இயேசு யார்? (16:13-20)*

*நமது விசுவாசத்தைக் குறித்தும் இயேசுவின் அடையாளம் பற்றியும் கேட்கப்பட்ட இயேசுவின் கேள்விக்கு பதில் இன்றும் அறுதியிட்ட முக்கியத்துவம் வாய்ந்தது. நாம் இயேசுவிலே விசுவாசம் வைத்திருக்கிறோம், ஆனால் நாம் எப்படிப்பட்ட இயேசுவை விசுவாசிக்கிறோம்? கலிலேயாவிலிருந்து வந்த மனுஷன் யார்?*

*சாட்சியங்கள் இயேசுவின் உரிமைகோருதல்களை நிரூபித்தன. அவர் தம்மை தெய்வீகமானவர் என்று உரிமை கோரினார் (லூக்கா 22:69, 70; யோவான் 14:7-11). அவரது நிரூபணம் நிறைவேறின தீர்க்கதரிசனத்திலும், அவர் செய்த கிரியைகளிலும் (11:2-5; லூக்கா 4:16-21), மற்றவர்களின் சாட்சியங்களிலும், யோவான் ஸ்நானனின் சாட்சி உட்பட (யோவான் 1:29-36) மற்றும் தேவன் தாமே கொடுத்த சாட்சி (3:16, 17; 17:5) யிலும் இருந்தது.*

*இயேசு தேவனுடைய குமாரனாயில்லாதிருந்திருந்தால் விளைவு என்னவாக இருந்திருக்கும்? நமது பிரசங்கம் விருதா. எல்லா அப்போஸ்தலர்களும் ஆதிக்கிறிஸ்தவர்களும் கிறிஸ்து உயிர்த்தெழுந்த பின் அவரைப் பார்த்தார்கள் என்று சொன்னவையெல்லாம் பொய்யான சாட்சியங்களாகும். கிறிஸ்துவுக்குள் மரித்த நம்முடைய அன்பானவர்கள் மறுபடியும் ஜீவிக்கப்போலதில்லை, மற்றும் பூமியிலேயே கிறிஸ்தவர்கள்தான் மிகவும் பரிதாபத்துக்குரிய மக்களாக இருப்பார்கள். அதற்கு நேர்மாறாக, பவுல் இயேசு வாழ்ந்தது உண்மை என்று சொன்னார், அவர் மரித்தார், மரித்தோரிலிருந்து உயிரோடு எழுந்தார், இன்றைக்கும் அவர் வாழ்ந்துகொண்டிருக்கிறார் என்று சொன்னார் (1 கொரிந்தியர் 15:13-19).*

## *பேதுருவின் அறிக்கை (16:16)*

*இயேசு தேவனுடைய குமாரன் என்று அறிக்கை செய்த முதல் நபரல்ல, ஆகிலும் அவர்தான் ஒரு முழுமையான அறிக்கை செய்த முதல் நபர் (16:16). "நானே அவர்" என்று இயேசு சொன்னவைகளை நாம் விசுவாசிக்க வேண்டும் (யோவான் 8:23-30). நாம் அவரை தேவனுடைய குமாரன் என்று விசுவாசிக்க வேண்டும். அதை மற்றவர்களுக்கு முன்பாக அறிக்கை செய்யவும் வேண்டும் (10:32, 33).*

## *கிறிஸ்துவின் சபை (16:18)*

*இயேசு சொன்னார், "நான் என் சபையைக்கட்டுவேன்" (16:18). "என்" எனும் பிரதிபெயர்ச்சொல் அவருக்குள்ள உரிமையையும் சபைக்குச் சொந்தம் பாராட்டுவதையும் குறிப்பிடுகிறது. கிறிஸ்து தமது இரத்தத்தைக் கிரயமாக செலுத்தி விலைக்கு வாங்கியதால் சபை அவருக்குச் சொந்தமானது (நடபடிகள் 20:28; 1 பேதுரு 1:18, 19; காண்க 1 கொரிந்தியர் 6:20). சபை அவருடைய சரீரம் (எபேசியர் 1:22, 23; கொலோசெயர் 1:18), அவருடைய மணவாட்டி (வெளிப்படுத்தின விசேஷம் 21:1, 2; காண்க ரோமர் 7:1-4; எபேசியர் 5:22, 23), அவருடைய மந்தை (யோவான் 10:14-16; 1 பேதுரு 5:1-4), மற்றும் தேவனு*

டைய குடும்பம் (1 தீமோத்தேயு 3:15). சபையைக் குறித்த விளக்கமளிக்கும் பொருட்டு வசனங்கள் வித்தியாசப்பட்ட அநேக குறிப்புக்களை கொடுக்கின்றன என்றாலும், சபை கிறிஸ்துவுக்குரியது என்று தெளிவுபடுத்தப்பட்டது.

இது உண்மையாதலால், கிறிஸ்துவின் சரீரத்தை "கிறிஸ்துவின் சபையார்" என்று குறிப்பிடுவதை ஏன் யாராயிருந்தாலும் ஆட்சேபிக்க வேண்டும்? இது வேதாகமத்தில் சபைக்குக் கொடுக்கப்பட்டுள்ள பெயர் (ரோமர் 16:16). சபை என்று அறியப்படுவதற்கு இது ஒன்று தான் ஆதாரம் என்று குறிப்பிடாமல், சபைக்காக மரித்த கிறிஸ்துவுக்கு உரியது என்று அடையாளப்படுத்தும் வசனங்களின் சொற்றொடரை பின்பற்ற வேண்டும் (எபேசியர் 5:25).

குறிப்புகள்

[1]Josephus *Wars* 3.10.7. [2]பெயர்சேபா என்பது இஸ்ரவேலின் தென்பகுதியில், யூதேயாவில் இருந்தது. [3]காண்க நியாயாதிபதிகள் 20:1; 1 சாமுவேல் 3:20; 2 சாமுவேல் 3:10; 17:11; 24:2, 15; 1 இராஜாக்கள் 4:25; 1 நாளாகமம் 21:2; 2 நாளாகமம் 30:5. [4]Josephus *Antiquities* 18.2.1; *Wars* 2.9.1. [5]Josephus *Wars* 3.9.7; 7.2.1. [6]Josephus *Antiquities* 15.10.3. [7]Josephus *Life* 13. [8]David Hill, *The Gospel of Matthew,* The New Century Bible Commentary (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1972), 259-60. ஹில், சொல் வழக்காகிய அப்படிப்பட்ட பாரம்பரியங்கள் மோசே மற்றும் ஏசாயாவைக் குறித்து *The Assumption of Moses* மற்றும் *The Ascension of Isaiah* என்பதில் குறிப்பிட்டுள்ளனர். [9]*Esdras* 2.18. [10]சுவிசேஷங்களின் பொழிப்புரையில், மாற்கு "கிறிஸ்து" என்று மட்டும் குறிப்பிடுகிறார் (மாற்கு 8:29), அதே வேளையில் லூக்கா "தேவனுடைய கிறிஸ்து" என்று குறிப்பிடுகிறார் (லூக்கா 9:20).

[11]யூதர்களின் பழைய சுவடிகளின் ஒரு வசனப் பகுதியில் பின் வருமாறு சொல்லப்படுகிறது, "பாரும், கர்த்தாவே, அவர்களுக்கு அவர்களுடைய இராஜாவை ஏற்படுத்தும், தாவீதின் குமாரனை, உம்முடைய தாசனாகிய இஸ்ரவேலை நீர் அறிந்த வேளையில் ஆளுகை செய்ய ஏற்படுத்தும், ஓ தேவனே. அநீதியாய் ஆளுகை செய்வோரை அழித்துப்போட ஏதுவான பெலத்தால் அவரை இடைகட்டி, எருசலேமைத் தமது காலடியின் கீழ் மிதித்து அழித்தும் போட நினைக்கும் புறஜாதி களிடமிருந்து பரிசுத்தப்படுத்தும்" (*சாலமோனின் சங்கீதம் 17:21, 22*). [12]John Lightfoot, *A Commentary on the New Testament from the Talmud and Hebraica: Matthew-1 Corinthians*, vol. 2, *Matthew-Mark* (Oxford University Press, 1859; reprint, Grand Rapids, Mich.: Baker, 1979), 234. உதாரணமாக, காண்க Talmud *Berakoth* 28b. [13]Walter Bauer, *A Greek-English Lexicon of the New Testament and Other Early Christian Literature,* 3d ed., rev. and ed. Frederick W. Danker (Chicago: University of Chicago Press, 2000), 809. [14]Ibid. [15]Michael J. Wilkins, "Matthew," in *Zondervan Illustrated Bible Backgrounds Commentary*, vol. 1, *Matthew, Mark, Luke,* ed. Clinton E. Arnold (Grand Rapids, Mich.: Zondervan, 2002), 102. [16]Hill, 262. [17]Donald A. Hagner, *Matthew 14-28*, Word Biblical Commentary, vol. 33B (Dallas: Word Books, 1995), 470. [18]எப்படியிருப்பினும், எபேசியர் 2:20ல் பேசப்படும் "அஸ்திபாரம்" என்பது அப்போஸ்தலர்களைக் குறிக்கிறது என்று எடுத்துக் கொள்ளாமல் அப்போஸ்தலருடைய உபதேசத்தைக் குறிப்பதாக சிலர் கூறுகின்றனர். [19]J. W. McGarvey, *The New Testament Commentarty*, vol. 1, *Matthew and Mark* (N.p., 1875; reprint, Delight, Ark.: Gospel Light Publishing Co., n.d.), 145. [20]புதிய ஏற்பாட்டில் "உள்ளூர் சபை" மற்றும் "கூட்டம்" எனும்

*வார்த்தைகள் சபையைக் குறிப்பதாகக் காணுகிற அதே வேளையில், ஒரு கூட்ட பொது ஜனங்களையும் அது குறிக்கும். எபிரேய மொழியிலிருந்து கிரேக்க மொழிக்கு மொழிபெயர்க்கப்பட்ட செய்துவஜிந்த்தின்படி ekklēssia என்பது பெரும்பாலும் இஸ்ரவேலின் "உள்ளூர் சபையை" கூட்டத்தைக் குறிக்கும் (காண்க நடபடிகள் 7:38). கிரேக்கர்கள் ஜனங்கள் ekklēssia கூடிவரும் "கூட்டத்தைக்" குறிக்க பயன்படுத்தினர் (காண்க நடபடிகள் 19:32, 39, 41).*

[21]Robert H. Gundry, *Matthew: A Commentary on His Literary and Theological Art* (Grand Rapids, Mich.: Wm. B. Erdmans Publishing Co., 1982), 331. [22]Jack P. Lewis, " 'The Gates of Hell Shall Not Prevail Against It' (Matt 16:18): A Study of the History of Interpretation," *Journal of the Evangelical Theological Society* 38 (September 1995): 353. [23]Homer *Odyssey* 14.156; *Iliad* 5.646; Aeschylus *Agamemnon* 1291; Hesiod *Theogony* 668, 774; Euripides *Hippolytus* 56-57, 1447; *Hecuba* 1-2; Diogenes Laertius 10.126. [24]Wisdom of Solomon 16:13 (NRSV); *காண்க* 3 Maccabees 5.51. [25]*பலஸ்தீனாவிலிருந்த பழங்கால கதவு திறவுகோல்களின் புகைப்படங்களை காண்க* Wilkins, 103. [26]Arthur Skevington Wood, "Key," in *The International Standard Bible Encyclopedia,* rev. ed., ed. Geoffrey W. Bromiley (Grand Rapids, Mich.: Wm. B. Erdmans Publishing Co., 1986), 3:10. [27]Talmud *Shabbath* 31ab. [28]Lightfoot, 236-41. [29]*இந்த விவரங்கள்ெல்லாம்* Ray Waddle, "Year of Jesus ... but which one and what beliefs?" *The Nashville Tennessean* (11 December 2004): B3. [30]Origen *Against Celsus* 1.6. *செல்சஸ்க்கு பதில் அளித்து ஆர்ஜியான் எழுதினார், உண்மை வார்த்தை, ஆர்ஜியானின் குறிப்பேடுகளில் மட்டும் காணப்படுகிறது.*

[31]Justin Martyr *Apology* 1.48. [32]Josephus *Antiquities* 18.3.3. *ஜோசிபஸ்ஸின் மேற்கோள்கள் கிறிஸ்தவர்களால் பதிப்பு அமைப்பு செய்யப்பட்டது, அவை ஜோசிப்பஸ் எனும் யூத வரலாற்று ஆசிரியர் எழுதியவை என்பதையும் அதில் எளிமையான சத்தியம் சொல்லப்படுகிறது என்றும் ஒரு பொதுவான புரிந்துகொள்ளுதல் அவர்களிடத்திலிருந்தது. (காண்க* Lee Strobel, *The Case for Christ* [Grand Rapids, Mich.: Zondervan Publishing House, 1998], 78-80.)